E-ISSN: 2583-0481



# செங்காந்தள்

அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்

## புனித ஜோசப் கலை மற்றும் அறிவியல் கல்லூரி

வெக்காலிபட்டி, மேட்டூர், தென்காசி.

## தமிழ் இலக்கியமும் நவீனகால ஆய்வு அணுகுமுறைகளும்

மலர் - 2, சிறப்பிதழ் 1, ஐப்பசி 2053

## பொருளடக்கம் / Contents


| வ.எண் S.No | தலைப்பு / பெயர் Title / Author Name | பக்க எண் Page No |
|---|---|---|
| 1 | வைரமுத்துவின் புதுக்கவிதைகளில் சமுதாயச் சிக்கல்கள்<br>Social Problems in the New Poems of Vairamuthu<br>முனைவர் ஞா. அந்தோணி சுரேஷ் / Dr. G. Antony Suresh | 1-15 |
| 2 | திராவிட இயக்கப் புதினங்களின் வளர்ச்சியும் வீழ்ச்சியும்<br>The Rise and the Fall of the Dravidian Movement Novels<br>மு. அரவிந் / M. Aravind<br>முனைவர் மோ. வசந்தகுமார் / Dr. M. Vasanthakumar | 16-24 |
| 3 | அணி இலக்கணத்தின் தாய் உவமை அணி - ஓர்ஆய்வு<br>A Study on Metaphor as the Mother of all Figures of Speech<br>இரா. அருணா / R. Aruna | 25-30 |
| 4 | உளத்திறன்கள் நோக்கில் தொல்காப்பியம் எழுத்ததிகாரம்<br>Tholkappiyam in Psychological Perspective<br>ஆ. அல்போன்சா / A.Alphonsa<br>முனைவர் வேல். கார்த்திகேயன் / Dr.Velkarthikeyan | 31-37 |
| 5 | சங்க இலக்கியங்களில் மகளிர்தொழில்கள்<br>Flower Jobs in Sangam Literature<br>முனைவர் சு. அனுசுயாதேவி / Dr. S. Anusuyadevi | 38-44 |
| 6 | தமிழச்சி தங்கபாண்டியனின் *அருகன்*: பெண்ணிய உளப்பகுப்பு<br>A Feminist Psychology of *Arugan* by Tamilachi Thangapandian<br>ந. அஜித் குமார் / N. Ajith Kumar<br>பேரா. வை. இராமராஜபாண்டியன் / Prof. V. Ramarajapandian | 45-54 |
| 7 | சிலப்பதிகாரத்தில் குடும்பம்<br>Family in *Silappathikaram*<br>முனைவர் த. ஆதிலெட்சுமி / Dr. T. Athilakshmi | 55-59 |
| 8 | இலக்கியத்தில் சூழல் மாசுபாடு<br>Environmental Pollution in Literature<br>முனைவர் சி. ஆன்சி மோள் / Dr. S. Ancy Mole | 60-41 |
| 9 | கண்ணன் மேல் பாரதி கொண்ட பக்தி நெறி –ஓர் பார்வை<br>Bharathi's Devotion on Kannan– A View<br>முனைவர் இரா. ஆன்றோ பியோ எழில் / Dr. R. Anto Pio Ezhi | 65-69 |
| 10 | *தோட்டியின் மகன்* மொழிபெயர்ப்பு நாவலில் தலித்திய சிந்தனைகள்<br>Dalit Thoughts in the Translated Novel *Thotiyin Magan*<br>ப. மு. கண்ணன் / P. M. Kannan<br>முனைவர் ப. இராஜேஷ் / Dr. P. Rajesh | 70-78 |

# இலக்கியத்தில் சூழல் மாசுபாடு

**முனைவர் சி. ஆன்சி மோள்**, தமிழ்த்துறைத் தலைவர், ஹோலி கிராஸ் கல்லூரி (தன்னாட்சி), நாகர்கோவில்.
ORCiD: https://orcid.org/0000-0003-3959-9578
DOI: 10.5281/zenodo.7312445

**ஆய்வுச்சுருக்கம்**

*இயற்கை என்பது ஒரு முழுமையான நிரந்தர இயல்பாகும். மனிதன் இயற்கையைச் சார்ந்து உயிர் வாழ்கிறான். இயற்கை மனிதனின் அங்கம் ஆகும். சங்க கால மக்கள் இயற்கையோடு பின்னிபிணைந்து வாழ்ந்துள்ளனர். பழந்த்தமிழர் வாழ்வில் இன்றியமையாக் கூறாக இயற்கை இருந்தமையையும் அக்கால மக்கள் இயற்க்கைக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களிலும் ஈடுபட்டு சூழல் மாசுபாடு அடைந்துள்ளது என்பதை பற்றி ஆராய்வதே இவ்வாய்வின் ஆய்வுச் சுருக்கம் ஆகும்.*

**திறவுச்சொற்கள்:** இயற்கை, காற்று, கலித்தொகை, மாசுபாடு

**முன்னுரை**

மனிதன் வாழ்கின்ற இந்த உலகம் தனித்தன்மை வாய்ந்தது நுண்ணுயிர்கள் தாவரங்கள், விலங்குகள், மனிதர் உட்பட அனைத்து உயிரினங்களும் வாழ்கின்ற பல்வேறு விதமான வாழிடங்களை சுற்றுச்சூழல் என்கிறோம். சுற்றுச்சூழல் என்பது மனிதனைச் சுற்றியுள்ள நிலம், நீர், காற்று, வான்வெளி, சூரியன், தாவரங்கள், பறவைகள், விலங்குகள் ஆகியவற்றையும், மனிதன் உருவாக்கும் ஒருங்கமைப்புகளையும் அவனது வாழ்க்கை நிலை, கலாச்சாரம், தொழில்நுட்ப பொருளாதார சட்ட அமைப்பு, சுகாதார அமைப்பு போன்றவை உள்ளடக்கியதாகும், இலக்கியங்களில் சுற்றுச்சூழல் சார்ந்த செய்திகளை காண்போம்.

**தொல்காப்பியம்**

**முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறை சிறந்தனவே**
**பாடலுள் பயின்றவை நாடுங் காலை (தொல். 17)**

என்ற தொல்காப்பியர் பொருளதிகாரத்தின் முதல் இயலான அகத்திணையியலில் சுற்றுச் சூழல் பற்றி குறிப்பிட்டுள்ளார் முதல் எனப்படுவது நிலமும் பொழுதும் என்பது தொல்காப்பியரின் விளக்கம் கரு என்பது தெய்வம் உணாவே மா விலங்கு புள் பறவை பூ பூக்கள் ஆகியவை சுற்றுச்சூழல் பொருள்கள் மனித வாழ்வு இயற்கைச் சுற்றுச்சூழலோடு தொடர்பு உடையது என்று புலப்படுகிறது.

**சங்க இலக்கியம்**

சங்க இலக்கியங்கள் பண்டைக்கால வரலாறும் நம் மக்களின் ஆதார அமைப்பில் இயற்கையும் மனிதனும் பிண்ணிப் பிரிக்க முடியாத ஒரு அமைப்பு என்பது கூறியிருக்கின்றன. பழங்கள் நீர் உண்ணும் பொருட்டு கோவலர், நாம் தோண்டிய கிணற்றினின்லும் வளைந்த வாயினையுடைய பத்தலால் இறைத்த நீர் ஒருகிச் சென்று சிறுகுழியில் நிரம்பியது. கதிரவன் காய்ந்தமையால் அந்நீரும் பற்றி குழியும் காய்ந்தது. இதனால் நீர் உண்ண வந்த யானை நீர் இல்லாதது கண்டு வருந்த,

**முற்றுச் சென்றதை ........**

**பல்வயின்**

**பயநிரை சேர்ந்த பாழ்நாட்டு ஆங்கண் நேடுவிளிக் கோவலர் கூடவல் தோண்டிய கொடுவாய்ப் பத்தல் வாந்து உரு நிறு குழி. நீர்காய் வருத்தமொரு சேர்விடம் பெறிது பெருங்களிறு மிதித்து அடியகத்து. (அகம் 155 : 6 -11)**

எனும் அகநானூற்றுப் பாடல் வரிகள் தெறிவுபடுத்துகிறது.

கலித்தொகையில் நீர் வற்றி நிலம் வெப்பம்உடையதாக இருப்பதைபல்வேறு பாடல்களில் காண முடிகிறது.

**அறுசுனை முற்றி**

**உடங்கநீர் வேட்ட உடம்பு உபங்கு லானை**

**கருத்தாம் பதிவு சுங்குக்னை தெறப்பட்டு**

**வெழிநிரை வேறாகச் சார்ச்சாரல் ஒடி (கலி.12:3-6)**

போர் காரணமாக எதிரி நாட்டு மன்னரின் நீர் நிலைகளை யானைகள் மாசுப்படுத்தப்பட்ட செல்தியும் காண முடிகிறது.

**ஒளிறு மருப்பின் களிகு அல**

**காப்புடைய கயம் படியினை**

**என்றும்**

**கடிதுறை நீர்க் களிறு படீஇ (கலி.12:3-8)**

பாடலில் அறியலாம்

**சுனாமி அலை**

சங்க கால மக்கள் இயற்கை சீற்றங்களிலிருந்து தங்களை பாதுகாக்கவும் பல்வேறு முறைகளை கையாண்டுள்ளதை.

**வான் கடற் பரப்பில் துவற்கு எஞ்சிய**

**...முடவுதிர் புன்னைத் தடவுநிலை மாச்சினை''**

**மரங்கள் அழிப்பு**

**சங்க காலத்தில் அரசனின் கோட்டைக்கு பெரும் கதவுகள் அமைப்பதற்கு பல்வேறு மரங்கள் அழிக்கப்பட்ட செய்தியை**

**"களிறே எழுவந் தாங்கிய**

**கதவம் மலைந்து (புறம் 97)**

மேலும்,

**குறத்தி மாட்டிய வறல்கடைக் கொள்ளி**

**ஆரம் ஆதலின் அம்புகை அயலது**

**சாரல் வேங்கை பூஞ்சினைத் தவழும் (புறம் 99)**

என்ற பாடலில் சந்தன மரம் எரிக்கப்பட்டதையும் அதனால் வெளியேறிய புகை வேங்கை மரத்தில் பிடிந்த்தையும் சந்தன மரம் அழிக்கப்பட்ட நிலையைக் காண முடிகிறது.

**காற்று மாசுபாடு**

காற்றானது வளி என்ற பெயரால் அழைக்கப்படுகிறது உயிர் வாழ காற்றானது இன்றியமையாததாகும். சங்க காலத்தில் காற்றானது பல்வேறு விதங்களில் மாசடைந்துள்ளன. வேண்டாத வாசனைகள் காற்றில் கலத்தல், வாயுக்களின் அளவு மாறுபாடு தூச்சுக்கள், மரம் எரிப்பதால் வரும் புகை போன்றவற்றால் பண்டைக்காலத்தில் காற்றானது மாசுபாடு அடைந்துள்ளது. இதனை,

**புகைபடு கூரெரி பரப்பிப்பகை செய்து**

**பண்பில் ஆண்மை தருதல் ஒன்றோ புறம் (புறம் 109)**

என்ற பாடல் வரிகளின் மூலம் அறியலாம்.

"தாழை மணந்து ஞாழலொடு நெழீஇ படப்பை நின்ற முடந்தான் புன்னை" (அகம் 180).

மேலும், "குமரிக் கோடுஸ் கொடுங்கடல் கொள்ள" (*சிலப்பதிகாரம்*)

என்ற பாடலில் கொடுமையான கடல் நிலத்தை கவர்ந்து விட்டது.

**காற்று மாசுபாடு**

சங்க காலத்தில் காற்றும் பல்வேறு நிலையில் மாசுபாடு அடைந்துள்ளசெய்திகளை காண முடிகிறது.

**பட்டினபாலையில்,**

**கார்க் கரும்பின் தமிழ் ஆலைத்**

**தீத்தெறுவின் கவின்வாடி**

**நீர்ச் செறுவின் நீர் நெய்தல்**

**தோள் தெங்கின் குலைவாழைக்**

மலர் - 2, சிறப்பிதழ் 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

**காய்க்கமுகின் தமிழ் மஞ்சள்**

**இனமாவின் இணர்ப்பெண்ணை**

**முதற்சேம்பின் இளை இஞ்சி (பட்டினப்பாலை9 -19)**

இப்பாடலில் பல்வேறு மரங்கள் புகைகளையும், தூசுகளையும் தடுத்து காற்று மாசுபாட்டை தடுப்பதற்கு பயன்பட்டுள்ளமை அறிய முடிகிறது.

**நிறைவாக**

சங்க இலக்கியத்தில் சுற்றுச் சூழல் பற்றிய செய்திகளும் இன்றைய தொழிலியில் முன்னேற்றத்தால் காற்று, நிலம், நீர் மாசுபாடு அடைவதைக் குறைப்பதற்க மரங்கள ஒரு நிரந்தத் தீர்வாக இருப்பதால் மரங்கள் அதிக அளவில் நடப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். மனிதனின் நல்வாழ்விற்கு பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களின் வாழ்விற்கும் நீர் அடிப்படை ஆதாரமாக உள்ளது. எனவே குடிக்கும் நீரையும் கடல் நீரையும் பிற நீர் ஆதாரங்களையும் மாசுபடாமல் பாதுகாப்பது நமது கடமையாகும்.

**துணை நூற்கள்**

[1] *தொல்காப்பியம்.* திருஞானசம்பந்தர், திருவையாறு.

[2] *அகநானூறு.* புலியூர் கேசிகன் பாரி இல்லம், சென்னை – 08.

[3] *கலித்தொகை.* பி.வி. சோமசுந்தரம், சைவ சமயம், சென்னை -18.

[4] *பத்துப்பாட்டு.* பி.வி. சோமசுந்தரம், சைவ சமயம், சென்னை-18.

[5] *சுற்றுச்சூழல் கல்வி* . ஜே.தர்மராஜ், டென்சி பப்ளிகேஷன், சிவகாசி.

[6] *சுற்றுச்சூழல் கல்வி* . முனைவர்.சுசீலா அப்பாதுரை, அம்பத்தூர், சென்னை - 98.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.